*கவனிக்க.-18.08.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2034 - 2017 අගෝස්තු මස 25 වැනි සිකුරාදා - 2017.08.25

*2034 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 130 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மோட்டார் வாகனம் (திருத்தம்) சட்டமூலம் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

129-B81201-353(2017/08)

# நானாவித அறிவித்தல்கள்

## ஸ்ரீ மகா பத்ரகாளியம்மன் மகா தேவாலய பொறுப்பு கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

திலும் எஸ். அமுனுகம ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "ஸ்ரீ மகா பத்ரகாளியம்மன் மகா தேவாலய பொறுப்பு கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

1. ஸ்ரீ பத்ரகாளியம்மன் மகா தேவாலயத்தை நடத்திச் செல்லல், அதன் முன்னேற்றம், பாதுகாப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு பொருளுதவி மற்றும் நிதியுதவியின் கீழ் சேவைகளை பேணல்;

2. இன, மத, ஆண், பெண் வேறுபாடு அல்லது வேறெந்தவித வேறுபாடுமின்றி வீடில்லாத குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து கொள்வதற்கு நிதியுதவியளித்தல்;

3. தொலைதூர (கஷ்டப்) பிரதேசங்களில் வழிபாட்டுத் தளங்கள் மற்றும் மக்கள் நலன்புரி தொடர்பாக சுயதொழிலுக்கான உதவிகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், அனர்த்தங்களின் போது உதவுதல், கல்வி மற்றும் தொழிற்றுறை தொடர்பாக உபகாரச் சம்பளம் (Bursary) வழங்குதல்; மற்றும்

பிறவும்.

திலும் எஸ். அமுனுகம,
பாராளுமன்ற உறுப்பினர்,
கண்டி மாவட்டம்.

8-891

---

**மேல் மாகாண மேல் நீதிமன்றம்**
(கொழும்பில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில்)

கொழும்பு 3, காலி வீதி, இல. 324, செரன்டிப் டவர் ஐச் சேர்ந்த செரன்டிப் லொகிஸ்றிக்ஸ் வேர்ல்வைட் (பிரைவட்) லிமிட்டட் விடயத்திலும்;

வழக்கு இலக்கம்: எச். சீ. (சிவில்) இல. : 35/2017/CO

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 12 ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான மனு குறித்தும்

கொழும்பு 2, ஹைட்பார்க் ரெசிடென்சீஸ், ஹைட்பார்க் கோர்னர், இல. 79, மாடி 4/1 ஐத் தற்காலிகமாகவும் அவுஸ்திரேலியா செயலர்ஸ் நொதேர்ன் பிரிட்ஜ் பேய்ரோட் இல. 14/135 இலும் இருப்பவரான கலாநிதி லக்ஸ்மன் திசாநாயக்க ஜெயவீர.

- மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை (கொழும்பில் குடியியல் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில்) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான விண்ணப்பம் 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 2 ஆந் திகதி கொழும்பு 2, ஹைட்பார்க் ரெசிடென்சீஸ் ஹைட்பார்க் கோர்ணர் இல. 79, மாடி 4/1 ஐத் தற்காலிகமாகவும் அவுஸ்திரேலியா செயலர்ஸ் நொதேர்ன் பிரிட்ஜ் பேய்ரோட் இல. 14/135 இலும் இருப்பவரான கலாநிதி லக்ஸ்மன் திசாநாயக்கா ஜெயவீர அவர்களால் மேற்குறித்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 3 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின்போது நேரடியாகவோ அல்லது பங்களிப்பு செய்தவர் எவராவது ஆதரவு அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அவரது அந்நேரத்திற்கான பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது

பங்களிப்பு செய்தவருக்கு தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ்க் குறிப்பிடப்பட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீலகண்டன் அன்ட் நீலகண்டன்,
மனுதாரரின் சட்டத்தரணிகள்,
எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

**குறிப்பு**: மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொண்டிருப்பின் அவர் அல்லது அவரின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணிகள் நீலகண்டன் அன்ட் நீலகண்டன் நிறுவனத்திற்கு நேரில் அல்லது கடித மூலம் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது கம்பனியாயின் கம்பனியின் பெயர் விலாசத்துடன் நபரினால் கம்பனியினால் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியினால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் மேற்குறித்தவருக்கு போதிய கால அவகாசத்துடன் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 2 ஆந் திகதி மாலை 6 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நீலகண்டன் அன்ட் நீலகண்டன்,
மனுதாரரின் சட்டத்தரணிகள்.

8-930

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.